# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 2003/41 - 2017 ජනවාරි මස 27 වැනි සිකුරාදා - 2017.01.27

*2003/41 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு சனவரி மாதம் 27 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும்

*பி. எஸ். இல. : CSA/1/COI/MS/02.*

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி அதிமேதகு மைத்திரிபால சிறிசேன அவர்களினால் செய்யப்படும் பிரகடனம்**

(முத்திரை)

மைத்திரிபால சிறிசேன

1. மாண்புமிகு கங்கானி தந்திரி சித்திரசிறி அவர்கள்
   உயர் நீதிமன்ற நீதிபதி
2. மாண்புமிகு பிரசன்ன சுஜீவ ஜயவர்த்தன அவர்கள்
   உயர் நீதிமன்ற நீதிபதி
3. திரு. கந்தசாமி வேலுப்பிள்ளை அவர்கள்
   ஓய்வுபெற்ற பிரதிக் கணக்காய்வாளர் நாயகம்

அவர்களுக்கு,

வாழ்த்துக்கள் !

இதற்கான அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயம் தொடர்பில் இழைக்கப்பட்டுள்ள ஒழுங்கீனங்கள் எனது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளதாலும்,

இந்த ஆணையின் கீழான சொல்லப்பட்ட விடயம் தொடர்பான புலனாய்வு மற்றும் விசாரணையின் நோக்கெல்லையானது, தமது நியதிச் சட்டரீதியானதும் சட்டரீதியானதுமான பொறுப்புக்களைப் பிரயோகிக்கும் இலங்கை மத்திய வங்கி (இதனகத்துப்பின்னர் CBSL என்று குறிப்பிடப்படும்) உள்ளிட்ட சம்பந்தப்பட்ட அதிகாரபீடங்களின்மீது எவ்விதத்திலும் தடைவிலங்கொன்றை விதிக்காது என்பதை அவதானித்தும், இந்த ஆணைக்கமைவாக நடத்தப்படும் விசாரணை மற்றும் புலனாய்வுகள் எவ்வாறிருப்பினும், சம்பந்தப்பட்ட அதிகாரபீடங்கள் எழுதப்பட்ட பொருத்தமான சட்டங்களுக்கமைய கிடைக்கக் கூடியதாகவிருக்கும் செயற்பாட்டைப் பரிசீலிப்பதற்கும் சாத்தியமானவிடத்து பின்பற்றுவதற்கும் அதிகாரமளிக்கப்பட்டுள்ளன என்பதைக் கவனத்திற் கொண்டும்,

இந்த ஆணையின் கீழான இந்தப் புலனாய்வும் விசாரணையும் CBSL உள்ளிட்ட சம்பந்தப்பட்ட அதிகாரபீடங்களினால் மேற்கூறப்பட்ட வகையில் தமது நியதிச்சட்ட ரீதியானதும் சட்டரீதியானதுமான பொறுப்புக்களைப் பிரயோகிப்பதில் மேற்கொள்ளப்பட்டிருக்கும் அல்லது மேற்கொள்ளப்படும் ஏதேனும் நடவடிக்கைகளுக்கு மேலதிகமானவையும் அவற்றிற்குப் பங்கமிழைக்காதவையுமாகும் என்பதைக் கவனத்திற் கொண்டும்,

இதற்கான அட்டவணையில் குறிப்பிடப்பட்ட அத்தகைய விடயம் தொடர்பாக விசாரிப்பதும் புலனாய்வு செய்வதும் அத்துடன் அத்தகைய ஒழுங்கீனங்கள் உண்மையானவையென கண்டறியப்படுமிடத்து, இதற்கான அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள சொல்லப்பட்ட விடயம் தொடர்பில் அத்தகைய முறைகேடுகளில் அவ்வாறு ஈடுபட்டுள்ள ஆட்களை இனங்காண்பதும் அவசியமாகியிருப்பதாலும்,

இதற்கான சொல்லப்பட்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள சொல்லப்பட்ட விடயம் தொடர்பில் இழைக்கப்பட்டுள்ள முறைகேடுகளுக்குப் பொறுப்பான ஆளை அல்லது ஆட்களை இனங்காண்பது அவசியமாகியிருப்பதாலும்,

எதிர்காலத்தில் அத்தகைய செயல்கள் மீண்டும் நடைபெறாதிருப்பதை உறுதி செய்வதற்கு என்ன நடவடிக்கைகள் பின்பற்றப்பட வேண்டும் என்பதைத் தீர்மானிக்குமுகமாக இதற்கான சொல்லப்பட்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயம் தொடர்பான அத்தகைய புலனாய்வையும் விசாரணையையும் நடத்துவது தேசிய நலனுக்குகந்ததாகும் என்ற கருத்தை நான் கொண்டிருப்பதாலும்,

இதற்கான சொல்லப்பட்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள சொல்லப்பட்ட விடயம் தொடர்பாக புலனாய்வும் விசாரணையும் செய்து அறிக்கையிடுவதற்கு விசாரணைக் குழுவொன்று நியமிக்கப்பட வேண்டும் என்பது அவசியமாகியுள்ளதென நான் கருதுவதாலும்,

எனவே, இப்போது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆகிய நான், உங்களுடைய விவேகம், திறமை மற்றும் விசுவாசம் ஆகியவற்றில் பெரும் நம்பிக்கை வைத்து திருத்தப்பட்டவாறான விசாரணை ஆணைக்குழுக்கள் சட்டத்தின் (அத்தியாயம் 393) பிரிவு 2 இன் ஏற்பாடுகளுக்கமைய, இத்தால் சொல்லப்பட்ட

1. மாண்புமிகு கங்கானி தந்திரி சித்திரசிறி அவர்கள்
உயர் நீதிமன்ற நீதிபதி
2. மாண்புமிகு பிரசன்ன சுஜீவ ஜயவர்த்தன அவர்கள்
உயர் நீதிமன்ற நீதிபதி
3. திரு. கந்தசாமி வேலுப்பிள்ளை அவர்கள்
ஓய்வுபெற்ற பிரதிக் கணக்காய்வாளர் நாயகம்

ஆகிய உங்களை பின்வரும் விடயங்கள் தொடர்பாக புலனாய்வு செய்து, விசாரணை செய்து அறிக்கையிடுவதற்கு எனது ஆணையாளர்களாக நியமிக்கின்றேன் :

(அ) இதற்கான சொல்லப்பட்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் இலங்கை மத்திய வங்கியின் முகாமைத்துவம், நிர்வாகம் மற்றும் விவகாரங்களின் நடத்துகை ;

(ஆ) இதற்கான சொல்லப்பட்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்ட சொல்லப்பட்ட விடயம் தொடர்பில் அரசாங்கத்திற்கு அல்லது CBSL அடங்கலாக ஏதேனும் நியதிச்சட்ட அமைப்பிற்கு சேதம் அல்லது கேடுவிளைவிக்கும் அத்தகைய முகாமைத்துவம், நிர்வாகம் மற்றும் விவகாரங்களின் நடாத்துகை ஆகியன தொடர்பாக கடைப்பிடிக்கவேண்டிய உரிய நடைமுறைகளின் ஏதேனும் முறைகேடு அல்லது ஒழுங்கீனம் அல்லது இயைந்தொழுகாமை இருந்துள்ளதா ;

(இ) இதற்கான அட்டவணையில் குறிப்பிடப்பட்ட சொல்லப்பட்ட விடயம் தொடர்பில் ஏதேனும் ஒப்பந்தக் கடப்பாடுகள் அரசாங்கத்திற்கு அல்லது CBSL அடங்கலாக ஏதேனும் நியதிச்சட்ட அமைப்பிற்கு சேதம் அல்லது கேடு விளைவித்து, மோசடியானமுறையில், கவனமின்றி, அசமந்தமாக அல்லது பொறுப்பற்ற வகையில் செய்து கொள்ளப்பட்டுள்ளதா அல்லது நிறைவேற்றப்பட்டுள்ளதா ;

(ஈ) இதற்கான சொல்லப்பட்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள அத்தகைய விடயம் தொடர்பில் கேள்விப் பத்திரங்களைக் கோருதல், ஒப்பந்தங்கள் அல்லது உடன்படிக்கைகளை அரசாங்கத்தின் சார்பில் செய்து கொள்தலில் கடைப்பிடிக்கவேண்டிய உரிய நடைமுறைகளுக்கு இயைந்தொழுகாமை அல்லது அவற்றை உதாசீனம் செய்தல் இருந்துள்ளதா ;

(உ) இதற்கான அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயம் தொடர்பிலான அத்தகைய இயைந்தொழுகாமை அல்லது உரிய நடைமுறைகளில் உதாசீனம் முறைகேடான அல்லது ஒழுங்கீனமான அல்லது பாரபட்சமான கேள்விப்பத்திர வழங்கலுக்கு இட்டுச் சென்றுள்ளதா ;

(ஊ) அரசாங்கத்துக்கு அதிசிறப்பான அனுகூலம் கிட்டும் வகையில் இத்தோடுள்ள குறிப்பிட்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயம் சம்பந்தமாக முறையான நடவடிக்கைமுறைகளும், போதிய முன்பாதுகாப்பு ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்னும் விடயம் ;

(எ) இத்தோடுள்ள, குறிப்பிட்ட அட்டவணையில் குறிப்பிட்ட விடயம் சம்பந்தமாக அரசாங்கத்துக்கு அல்லது CBSL உள்ளிட்ட வகையிலான ஏதாவது நியதிச் சட்ட அமைப்புக்கு அத்தகைய சேதத்தை அல்லது தீங்கை விளைவித்த செயல் அல்லது செயலின்மை அல்லது நடத்தைக்குப் பொறுப்பான நபர் அல்லது நபர்கள் ;

(ஏ) இத்தோடுள்ள குறிப்பிட்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மேற்படி விடயம் ஏதாவது சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட விசாரணை அல்லது நுணுக்க ஆய்வில், அரசாங்கத்துக்கு அல்லது CBSL உள்ளிட்ட அளவிலான ஏதாவது நியதிச்சட்ட அமைப்புக்கு சேதம் அல்லது தீங்கு விளைவிக்கும் வகையில் குந்தகம் அல்லது ஏதாவது வகையிலான தடை இடம்பெற்றதா என்னும் விடயம் ;

(ஐ) அரசாங்கத்துக்கான மிகச் சிறந்த விலை அல்லது அனுகூலத்தை உறுதி செய்யும் நோக்கத்தில் இத்தோடுள்ள குறிப்பிட்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள அத்தகைய விடயத்தை எதிர்காலத்தில் நிறைவேற்றுகையில் அது ஒளிவுமறைவின்மையுடனும், முறையான வகைப்பொறுப்புடனும் செய்யப்படுவதை உறுதி செய்வதற்கு எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைமுறைகள் ;

(ஒ) இத்தோடுள்ள குறிப்பிட்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயம் தொடர்பாக அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்துதல் அல்லது துஷ்பிரயோகம், செல்வாக்கு, தலையீடு, மோசடி, முறைகேடுகள் மற்றும் உறவினருக்குச் சலுகை அல்லது ஊழல் செயற்பாடுகளுடன் தொடர்புபட்ட ஏதேனும் செயல் அல்லது செய்யத் தவறுகை இடம்பெற்றுள்ளதா ;

மற்றும் இத்தோடுள்ள குறிப்பிட்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயம் சம்பந்தமாக எழுத்தாணையின் நியதிகளின் கீழ் ஆய்வு அல்லது விசாரணை செய்யப்பட்டுள்ள விடயங்கள் குறித்து விதப்புரைகளை மேற்கொள்வதற்கும்,

மேலும், நான் இத்தால் மாண்புமிகு கங்கானி தந்திரி சித்திரசிறி ஆகிய தங்களை குறிப்பிட்ட ஆணைக்குழுவின் தவிசாளராக நியமிக்கின்றேன்.

மேலும், நான் இத்தோடுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள அத்தகைய விடயம் சம்பந்தமான அவசியமான சகல விசாரணைகளையும் ஏனைய ஆய்வுகளையும் மேற்கொள்ளுமாறு தங்களுக்கு அதிகாரமும், வலுவும் வழங்குவதோடு, இந்த எழுத்தாணையின் திகதியிலிருந்து மூன்று மாதங்களினுள் அது குறித்த ஓர் அறிக்கையைத் தங்கள் கையொப்பத்துடன், விசாரணைகள் மற்றும் ஆய்வுகளின் தேடல் முடிவுகளும், அவை குறித்த உங்கள் விதப்புரைகளும் உள்ளடங்கும் வகையில் எனக்குச் சமர்ப்பிக்குமாறு வேண்டிக்கொள்ளுகின்றேன்.

மேலும் இத்தோடுள்ள குறிப்பிட்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயம் சம்பந்தமான ஏதாவது ஆய்வு அல்லது விசாரணையில் ஏதாவது பகுதி உங்களின் தற்றுணிபின் பிகாரம் தீர்மானிக்கப்படும் வேளையில் பகிரங்கமாக இடம்பெறக்கூடாதென்றும் இத்தால் பணிப்புரை விடுக்கின்றேன். மேலும் தாங்கள் உதவி அல்லது தகவல்கோரி விண்ணப்பிக்கும் சகல பகிரங்க உத்தியோகத்தர்களிடமும், ஏனையோரிடமும் இது விடயத்தில் முறையாக வழங்கக்கூடிய அத்தகைய சகல உதவிகளையும், தகவல்களையும் வழங்குமாறு கோரிக்கையும் பணிப்புரையும் விடுக்கின்றேன்.

மேலும் நான், மேற்குறிப்பிட்ட விசாரணை ஆணைக்குழுச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஆணைக்குழுவுக்குப் பொருந்தியமைய வேண்டுமென்றும் இத்தால் பிரகடனம் செய்கின்றேன்.

2017 ஆம் ஆண்டு சனவரி மாதம் 27 ஆந் திகதி இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் இலச்சினையின் கீழ் வழங்கப்பட்டது.

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

பி. பீ. அபேகோன்,
சனாதிபதியின் செயலாளர்.

**அட்டவணை**

1. (இதனகத்துப்பின்னர் "அத்தகைய திறைசேரி முறிகள்" என அழைக்கப்படும்) திறைசேரி முறிகளை 2015, பெப்புருவரி மாதம் 01 ஆந் திகதிக்கும், 2016, மாச்சு மாதம் 31 ஆந் திகதிக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் வழங்கியமை ;

(அ) பின்வருபவை சம்பந்தமான தீர்மானங்கள் உள்ளிட்டவகையில், இத்தகைய திறைசேரி முறிகள் வழங்கப்படமுன்னர் இடம்பெற்ற தீர்மானம் மேற்கொள்ளும் செயல்முறைகள் ;

(i) இத்தகைய திறைசேரி முறி வழங்கல் மூலம் திரட்டப்படவிருக்கும் பணத்தொகை ;

(ii) இத்தகைய திறைசேரி முறிகளுக்குச் செலுத்தப்படவேண்டிய வட்டிவீதத்தைத் தீர்மானிக்கும் வழிமுறை ;

(iii) இத்தகைய திறைசேரி முறிகளுக்குச் செலுத்தப்படவேண்டிய வட்டியைச் செலுத்தவேண்டிய திகதிகள் ;

(iv) அத்தகைய திறைசேரி முறிகளை மீட்கும் நோக்கத்தில் ஏற்படுத்தப்படும் கடன்தீர் நிதியத்துக்குப் பங்களிப்பாகத் திரட்டு நிதியிலிருந்தும், இலங்கையின் சொத்துக்களிலிருந்தும் ஒதுக்குகள் மேற்கொள்ளப்படவேண்டிய வீதவரியும், அவை மேற்கொள்ளப்படும் காலப்பகுதி முடிவுகளும் மற்றும் அத்தகைய பங்களிப்புகள் ஆரம்பிக்கவுள்ள திகதியும் ;

(v) இத்தகைய திறைசேரி முறிகளை மீட்கும் திகதி.

(ஆ) இத்தகைய திறைசேரி முறிகளைப் பிரதானமாகக் கையாளுவோர், நேரடிப் பங்கேற்பாளர்கள் அல்லது கையாளுவோர் நேரடிப் பங்கேற்பாளர்கள் பொறுப்புத் தீர்த்தல்.

02- 558

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.